**தலைப்பு 224 – இலங்கை விமானப் படை**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 224 - இலங்கை விமானப் படையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப் படையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2023 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப் படை தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2023 ஜூன் 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினை தவிர்த்து, 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான இலங்கை விமானப் படையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ் அறிக்கை 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படும் இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப் படையினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் இலங்கை விமானப் படையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு இலங்கை விமானப் படையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு/ கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளன.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) மூலதனச் செலவுகள்**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 66/69 மாற்றத்தின் கீழ் பாகிஸ்தான் கடன் திட்டத்தின் கீழ் யுத்தத் தாங்கிகள் (APC-15) கொள்வனவு செய்வதற்காக கிடைத்திருந்த ஏற்பாடுகளில் இருந்து ரூபா 15,795,903 தொகை இந்திய கடன்திட்டத்தின் கீழ் ரேடார் முறைமைக்கு உதிரிப் பாகங்கள் கொள்வனவு செய்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | (i) வருட ஆரம்பத்தில் இந்திய கடன் திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ரூபா 272,000,000 இற்கான ஏற்பாடுகள் திருத்திய மதிப்பீட்டின் மூலம் ரூபா 15,000,000 தொகை வரை குறைக்கப்பட்டிருந்தது. எனினும் அந்தப் பண்டங்களில் விடுவிப்பு அலுவல்களுக்காக சுமார் ரூபா 25,700,000 இற்கான ஏற்பாடுகள் தேவைப்படல்.<br>(ii) பாகிஸ்தான் கடன் திட்டத்தின் கீழ் 2022 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்காக திட்டமிடப்பட்டிருந்த APC 10 இற்கு உரிய பெறுகை செய்முறை 2022 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போதல். | வெளிநாடுகள் இரண்டின் இரண்டு செயற்திட்டங்களுக்காக இரண்டு குறிக்கோள்களுக்காக கிடைத்திருந்த கடன் எனப்படுவதால் குறிப்பிட்ட குறிக்கோளுக்கு மாத்திரம் செலவிடப்பட வேண்டும். |

**(ஆ) ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்தல் தொடர்பாக பின்வரும் குறைபாடுகள் கண்டறியப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | ACA 6 படிவத்தின் படி நிதியல்லாத சொத்துக்கள் - 9152 போக்குவரத்து உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் வரவு மற்றும் செலவு வைத்தல்கள் தொடர்பாக பெறுமதிகள் திறைசேரியின் பரீட்சை மீதியில் வரவு மற்றும் செலவு மீதிகளுடன் முறையே ரூபா 54,396,990 தொகை மற்றும் ரூபா 87,423,189 தொகையினால் இணங்கியிருக்கவில்லை. | ACA 6 படிவத்தில் உட்படுத்தப்பட்டுள்ளது சிகாஸ் இணையதளத்திற்கு உட்செலுத்தப்பட்ட நிதியல்லாத சொத்துக்களின் அறிக்கையாகும். அதில் ஆண்டின் போது நிதியல்லாத சொத்துக்கள் குறைதல் கூடுதல் உட்படுத்தப்படும். எனினும் திறைச்சேரியின் பரீட்சை மீதியில் வரவு மற்றும் செலவு மீதிகளில் உட்படுத்தப்படுவது ஆண்டிற்கான நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நாட்குறிப்பு பெறுமதிகள் மாத்திரமே. | திணைக்கள ஏடுகளில் கணக்கீடு செய்தல் தொடர்புடைய வரவு மற்றும் செலவு கணக்கு பொழிப்புக்களின் மூலம் திறைசேரிக்கு அறிவிக்கப்படுவதனால் திணைக்களம் மற்றும் திறைசேரியின் பரீட்சை மீதி இடையே வித்தியாசம் காணப்பட முடியாது. |
| (ii) | நி.பி. 109 இன் கீழ் 03 விமானங்களுக்கான நட்டங்கள் சேதங்கள் பதிவழிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 85,255,268 தொகை குறைவாக பதிவழிக்கப்பட்டிருந்ததுடன், மேலும் ஒரு விமானத்தின் நட்டங்கள் சேதங்களின் கீழ் பதிவழிக்கும் போது அங்கீகரிக்கப்பட்ட பெறுமதியை விட ரூபா 14,772,702 தொகை மிகையாக பதிவழிக்கப்பட்டிருந்தது. | விசாரணை நீதி சபைகளினால் ஒன்றின் 4 சம்பவங்கள் தொடர்பாக நட்டங்களை வெவ்வேறாக கணிக்கப்பட்ட பின்னர் ஏடுகளில் இருந்து பதிவழிப்பதற்கு பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்தை பெற்று நி.பி.109 இணங்க நட்டத்தை ஏடுகளில் இருந்து பதிவழித்தல் மேற்கொள்வதற்காக பொறுப்பான பிரிவுகளுக்கு அறிவிக்கப்பட்டது. | சேதங்கள் நட்டங்களை சரியாக இனங்கண்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் மற்றும் பதிவழித்தல் மேற்கொள்ள வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 85(1)(இ) இன் பிரகாரம் வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது இயன்றளவு யதார்த்தமாக மற்றும் சரியாக காணப்பட வேண்டியிருந்த போதிலும் வருமானத் தலைப்பு | எதிர்காலத்தில் விமான வாடகை வருமான மதிப்பீடு மிகவும் யதார்த்தமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது இயன்றளவு யதார்த்தமாக மற்றும் சரியாக மதிப்பீடுகள் தயாரிப்பதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | 20.03.02.16 – விமான வாடகை வருமான மதிப்பீடு தயாரிக்கும் போது மீளாய்வாண்டை போலவே கடந்த 06 ஆண்டுகளாக 33 சதவீதம் முதல் 91 சதவீதம் வரை தணிப்பு செய்து திருத்தப்பட்டிருந்தது. அதே போல் 2016 ஆண்டிற்கு நேரொப்ப 24 சதவீதத்திற்கும் 94 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வருமானம் உழைத்தல் பிரதிகூலமான தணிப்பு ஒன்றாக முரணடைந்திருந்தது. | | நடவடிக்கை எடுக்க வேண்டும். அந்த வருமானங்களை அறவீடு செய்வதற்காக காலரீதியான மற்றும் செயற் திறனுள்ள வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 128 (2)(உ)இன் பிரகாரம் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அரசுக்கு கிடைக்க வேண்டிய நிலுவை வருமானங்களை தாமதமின்றி சேகரித்தல் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், 4 வருடங்களுக்கும் 19 வருடங்களுக்கும் இடைப்பட்ட விமான வாடகை நிலுவை வருமானத்தின் கூட்டுத்தொகை ரூபா 12,674,073 தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. அவற்றில் அடங்கிய 02 தனியார் நிறுவனங்களில் இருந்து பெற வேண்டிய நிலுவைத் தொகையின் கூட்டுத்தொகை ரூபா 3,612,665 தொகையாக காணப்பட்டது. | இந்த நிலுவையாதலை தீர்ப்பதற்காக அமைச்சுக்களில் ஏற்பாடுகள் காணப்படாமையால் நிலுவைத் தொகைகளை பதிவழித்தல் தொடர்பாக அமைச்சரவை பத்திரம் ஒன்று சமர்ப்பிக்கும் படி பாதுகாப்பு அமைச்சுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது. | வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் அரசுக்கு பெற வேண்டிய நிலுவை வருமானத்தை தாமதம் இன்றி சேகரித்தல் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டுமென பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் ஒருவரின் எழுத்துமூலக் கோரிக்கை மற்றும் உடன்படிக்கைகள் மீது வாடகைக்கு கொடுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இரத்மலான விமானப் படை தளமுகாமில் காணப்படும் விமானப்படை நூதன சாலையின் மூலம் 2022 ஆண்டில் உழைத்த ரூபா 21,303,078 இற்கான வருமானத்தில் அரசு இழந்திருந்த வருமானம் ரூபா 18,912,131 தொகையாகும். | முப்படைகளின் உள்ளக நிதியங்களை நிருவகித்தல் தொடர்பாக பாதுகாப்பு செயலாளரினால் நிதியமைச்சுச் செயலாளருக்கு அறிவுறுத்தப்பட்டது. அதன் படி நிதியமைச்சில் இருந்து கிடைக்கும் அறிவுரைகளின் படி உள்ளக நிதியங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு விமானப் படையினால் திட்டமிடப்பட்டுள்ளது. | அரச சொத்துக்களை பயன்படுத்துவதன் மூலம் உழைக்கக் கூடிய வருமானம் முழுமையாக அரசாங்கத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |

## 2.2 செலவு முகாமைத்துவம்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச செலவுகளை கட்டுப்படுத்துவதற்காக 2022 ஏப்ரல் 26 திகதிய நிதியமைச்சின் திறைசேரிச் செயலாளரின் தேசிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 3/2022 இன் 02 ஆம் பந்திக்கு இணங்க அரச செலவினங்களை கட்டுப்படுத்துவதற்கு அனைத்து அரச நிறுவனங்களும் கடுமையான நடவடிக்கை முறைகளை கடைபிடிக்க வேண்டுமென அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் வெளிநாட்டு கல்வி சுற்றுலா மற்றும் பயிற்சிகளுக்காக செலவுத் தலைப்பு 224-1-1-1102 கீழ் ரூபா 8,342,043 தொகைக்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதே போல் செலவுத் தலைப்பு 224-1-1-2401 இன் கீழ் வெளிநாட்டு பயிற்சிக்கான சுற்றுலாகளுக்காக மீளாய்வாண்டு மே மாதம் முதல் ஆகஸ்ட் வரை ரூபா 31,246,205 தொகை செலவிடப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் 2022 மே மாதம் முதல் 2022 திசெம்பர் வரையான காலப் பகுதியில் 224-1-1-0-1102 இன் கீழ் பாதுகாப்பு அமைச்சின் பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின்னர் வெளிநாட்டு பிரயாணங்களுக்காக ரூபா 8,342,042 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அரச செலவினங்கள் கடுமையாக கட்டுப்படுத்துவதற்கான சுற்றறிக்கைக்கு இணங்க போலவே நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணத்தினால் காலத்திற்குரிய தேவைப்பாடுகளையும் கவனத்திற்கு எடுத்து செலவுகளை கட்டுப்படுத்த வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) அரச கணக்கு திணைக்களத்தின் 2021 ஒக்தோபர் 26 திகதிய 2021/02 இலக்க கொண்ட அரச கணக்கு வழிகாட்டல் 4.5 | அறிவிக்கப்படாத எவ்வித ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் அல்லது பொறுப்புக்கள் 2022 ஆண்டில் தீர்க்கப்படக் கூடாது எனினும் அந்த ஏற்பாடுகளுக்கு புறம்பாக முன்னைய ஆண்டின் ஈடுபாட்டுப் பொறுப்பு பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருக்காத 04 சந்தர்ப்பங்களுக்கு உரிய கூட்டுத்தொகை ரூபா | பொறுப்புக்கள் மீதி தொடர்பாக CIGAS கணக்கீட்டு முறைமையில் அந்த மீதி பொறுப்பு என காட்டப்பட்டிருந்த போதிலும் தவறுதலாக பொறுப்புக்கள் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்கு வழிகாட்டலுக்கு இணங்க அறிவிக்கப்படாத ஏதேனும் ஈடுபாட்டு பொறுப்புக்கள் அல்லது பொறுப்புக்கள் மீளாய்வாண்டில் தீர்க்கப்பட முடியாது. |

7

| | | | |
|---|---|---|---|
| | 1,703,403 இற்கான பொறுப்புக்கள் 2022 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. | | |
| (ii) நிதிப் பிரமாணம் 128 (2)ஏ | அரச வருமானங்கள் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் தேவையான சந்தர்ப்பங்களில் பொருளாதார முறைமையில் மற்றும் ஏனைய நிலமைகளில் மாற்றங்கள் தொடர்பாக கவனத்துடன் வரிக் கட்டணங்கள் அறவீட்டினை மீளாய்வு செய்து அதனை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். எனினும் அதற்கு புறம்பாக இரத்மலான தள முகாமின் 04 கட்டிடங்கள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக அறவிடப்பட்டிருந்த மொத்த வாடகை வருமானம் ரூபா 1,511,000 தொகையில் ரூபா 161,200 தொகையினை மாத்திரம் அரசிற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 1,349,200 தொகைக்கான கட்டிட வாடகை வருமானத்தை அரசு இழந்துள்ளது. | (i) கணக்காய்வு பந்தியில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வாறு அரச பெறுமதி மதிப்பீட்டுப் பெறுமதி அரசாங்கக் கணக்கிற்கு செலவு வைப்பதற்காக தேவையான ஆலோசனைகள் பொறுப்புவாய்ந்த பிரிவுகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>(ii) இக் கட்டிட வாடகை வருமானம் சேவை நிறுவன நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட போதிலும் அப் பணம் படையணி சேவை நபர்களுக்கான நலன்புரி அலுவல்களுக்காக ஈடுபடுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க அரச வருமானம் தொடர்பான கணக்கீட்டு உத்தியோகத்தரினால், தேவையான சந்தர்ப்பங்களில் பொருளாதார நிலைமையில் மற்றும் ஏனைய நிலைமை மாற்றங்கள் தொடர்பாக கவனத்தில் எடுத்து வரி கட்டணங்கள் அறவீடு செய்தல் மீளாய்வு செய்யப்பட்டு அவை திருத்தப்பட வேண்டும் மற்றும் அந்த வருமானம் அரச வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டும். |

### 2.4 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அரச உத்தியோகத்தருக்கான பீ கணக்கிற்கு உரிய கடன் தொகையை செலுத்தி முடிவதற்கு முன்னர் ஓய்வுபெற்ற/ இறந்த / சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோத்தர்களின் முற்பணக் கணக்கு மீதியை | மேலும் மீதியாகக் காணப்படும் நிலுவைக் கடன் மீதிகளை தீர்த்துக் கொள்வதற்காக தகவல்கள் சேகரிக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறு கிடைத்த தகவல்களின் மூலம் பழைய கடன் மீதிகளை தீர்த்துக் கொள்ளல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதுடன் தகவல்கள் கண்டறிய முடியாத கடன் மீதிகள் நிதியமைச்சு ஊடாக பதிவழிப்பதற்கு | முற்பணக் கடன்கள் தொடர்பாக நிலுவையாகக் காணப்படும் கடன் தொகைகளை அறவீடு செய்வதற்காக தாபனக் கோவையின் XXIV அத்தியாயத்தின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முறையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| அறவீடு செய்வதற்கு முடியாத சந்தர்ப்பங்களில் பிணையாளர்களிடம் அல்லது மரபுரிமையாளர்களிடம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு புறம்பாக 207 உத்தியோகத்தர்களின் 5 வருடங்களுக்கு மிகையான காலம் நிலுவையாகக் காணப்பட்ட கடன்மீதி ரூபா 8,267,831 தொகையாக காணப்பட்டது. | தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆண்டில் இலங்கை விமானப் படை மொரவெவ முகாமில் அரச வருமானத்திற்காக செயற்படாத நியதிச் சட்டம் சார் அல்லாத நிதியம் ஒன்றாகிய விவசாய செயற்திட்டம் ஒன்றிற்காக ரூபா 5,290,000 தொகை பெறுமதியான நெல் வெட்டும் இயந்திரம் ஒன்று அரசாங்க பணத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் குறைநிரப்பு 35 இல் 2.14.1 இன் கீழ் இந்த நெல் வெட்டும் இயந்திரம் கொள்வனவு செய்யும் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் இலங்கை விமானப் படை தலைமையகத்தின் மூலம் இந்த நெல் வெட்டும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக மிகவும் தகைமையுடைய பெறுகை செய்முறை என பிரதேச பெறுகை தெரிவு செய்யப்பட்டு இருந்தது. விவசாய செயற்திட்டம் இலாப நோக்கின்றி நலனோம்பு குறிக்கோளுடன் செயற்படுத்தப்படுவதனால் அரச நிதியத்திற்கு பணம் செலவு வைத்தல் மேற்கொள்ளப்படாத போதிலும் தேசிய பொருளாதாரத்திற்கு நலன்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. | அரசாங்கப் பணம் செலவிடப்படும் போது அரச குறிக்கோள்களுக்காக செலவிடப்பட வேண்டியதுடன் குறிப்பிட்ட செலவின் நலன்கள் அரசிற்கு கிடைக்க வேண்டியிருந்தது. |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 128(2)(ஊ) இன் படி அரசுக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவான முறையான ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டுமென கணக்கீட்டு உத்தியோத்தரின் பொறுப்பாகும். எனினும் அதற்கு புறம்பாக ACA 6 படிவத்திற்கு இணங்க இலங்கை விமானப் படைக்கு சொந்தமான கூட்டுப்பெறுமதி ரூபா 53,846,539,763 தொகைக்கான 110 விமானங்களில் 66 விமானங்கள் 1 வருடம் முதல் 23 வருடங்கள் வரையான நீண்டகாலம் முதல் செயற்பாட்டு அலுவல்களழவட நீங்கி செயற்படாமல் காணப்பட்டது. | 27 வகையான 66 விமானங்கள் நீண்ட காலமாக செயற்படாமல் உள்ளன. | அரசுக்கு சொந்தமான சொத்துக்கள் பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பிற்காக போதியளவு முறையான ஏற்பாடுகள் ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | கடுநாயக்க விமானப் படை முகாமில் மோட்டார் வாகனப் பிரிவில் ரூபா 5,016,000 பெறுமதியான 08 லேன்ட் ரோவர் டிபென்டர்கள் 03 வருடங்களுக்கு மிகையான காலம் திருத்த வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்பட்டது. | 06 வாகனங்கள் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுவதுடன் இரண்டு வாகனங்களின் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. | திருத்த வேலை அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்து குறிப்பிட்ட டிபென்டர் வண்டிகளை பயன்படுத்த வேண்டும். |
| (இ) | இலங்கை விமானப் படையின் கட்டுநாயக்க, ஹிங்குரங்கொட, ரத்மலான ஆகிய தள முகாம்களில் காணப்பட்ட பல்வேறு களஞ்சிய பிரிவுகளில் சீருடைகள், கட்டிட பொருட்கள், மின்சார உபகரணங்கள் உட்பட 31 வகையான பண்டங்களுக்கு உரிய கூட்டுப் பெறுமதி ரூபா 29,209,872 தொகைக்கான இருப்புக்கள் பயன்படுத்தப்படாமல் 01 வருடம் முதல் 09 வருடங்களுக்கு இடைப்பட்ட காலம் விளைவற்று களஞ்சியத்தில் காணப்பட்டது. | 2022 ஆண்டில் நிலவிய நிதி நெருக்கடி காரணமாக செயற்திட்ட நிர்மாண வேலை அலுவல்கள் இடைநிறுத்தப்படல், அவசர தேவைப்பாடுகளின் போது பண்டங்கள் தட்டுப்பாடுகள் இன்றி பயன்படுத்தும் தேவைப்பாடு, பண்டங்களுக்கான கேள்வி முகாம்களில் இருந்து சமர்ப்பிக்கப்படாமை, எதிர்கால தேவைக்காக கொள்வனவு செய்யப்பட்ட பண்டங்கள் களஞ்சியத்தில் காணப்படல், மீதியான மொத்த இருப்புக்களும் முகாம் அலகுகளின் தேவைப்பாட்டிற்காக வழங்குதல், அமைதிப் | முறையான தேவைப்பாட்டினை இனங்கண்டு கொள்வனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டியது போலவே பண்ட இருப்புக்கள் விளைவற்று வைத்திருக்க கூடாது |

| | | |
|---|---|---|
| | படைக்காக இருப்புக்கள் அனுப்பும் போது பாரத்தின் எண்ணிக்கை மீது தடுத்து வைத்திருந்தது. | |

**3.3 நட்டங்கள் மற்றும் சேதங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 13 திகதிய அரச கணக்குத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அரச கணக்கு வழிகாட்டல் இலக்கம் 2022/5 இன் பின்இணைப்பு 06 இன் (1) படி சமர்ப்பிக்கப்பட வேண்டிய நட்டங்கள் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்றில் வருடாந்த நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் 190 நட்டச் சம்பவங்கள் தொடர்பாக மொத்தக் கூட்டுத் தொகை ரூபா 577,625,395 தொகை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | கணக்குகள் தயாரிக்கும் போது பல சந்தர்ப்பங்களில் இந்த தகவல்கள் உரிய முறையில் தொடர்பாடல் மேற்கொள்ளப்படாத சிக்கல் ஒன்று காணப்படுவதென கண்டறியப்பட்டுள்ளது. இந்த நிலைமையை தவிர்ந்து கொண்டு நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுமென அறிவிக்கின்றேன். | குறிப்பிட்ட வழிகாட்டலுக்கு இணங்க நட்டங்கள் மற்றும் சேதங்கள் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) 2022 ஆண்டிற்குரிய 05 சந்தர்ப்பங்களின் கூட்டுப் பெறுமதி ரூபா 38,625,367 தொகைக்கான நட்டங்கள் சேதங்கள் நி.பி. 109 இன் கீழ் நட்டம் என பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் இணைப்பு (ii) நி.பி. 109 இன் கீழ் காணப்படும் நட்டங்கள் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் போது நி.பி. 109 இன் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த நட்டங்கள் சேதங்கள் ஆறு (6) தொடர்பான பெறுமதி நி.பி. 109 இன் கீழ் நட்டங்கள் சேதங்கள் பதிவழித்தல் தொடர்பான கூற்றில் உட்படுத்தப்படாமைக்கான காரணம் குறிப்பிட்ட கோப்புக்களின் அலுவல்கள் முடிவடைந்திருக்காமையே. | மீளாய்வாண்டின் நி.பி. 109 இன் கீழ் நட்டங்கள் பதிவழிப்பதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |

**3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அமைதிப் படைக்கு அனுப்புவதற்காக 2022 ஏப்ரல் 22 திகதி ரூபா 41.9 மில்லியன் தொகை செலுத்தி லேன்ட்ரோவர் டிபென்டர் ஜீப் வண்டி ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | i. இவ் வண்டியை கொள்வனவு செய்வதற்கு தேவையான அலுவல்கள் 2020 ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டு | மிகையான செலவொன்று மேற்கொண்டு சபைக்கு பெற்றுக் கொண்ட சொத்துக்கள் விளைவற்றதாக்காமல் |

| | | | |
|---|---|---|---|
| | எனினும் 2023 மே 19 திகதி வரை அந்த ஜீப் வண்டி அமைதிப் படைக்கு அனுப்பியிருக்கவில்லை. | இருந்ததுடன் அமைதிப் படையின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக வரக் கூடிய விஷேட நபர்களுக்கு போக்குவரத்து வசதிகள் வழங்கும் தேவைப்பாட்டிற்கு ஆகவேயாகும்.<br>ii. வாகனத்திற்காக விண்ணப்பிக்கும் போது இரண்டு அமைதிப் படை செயற்பாடுகள் காணப்பட்ட போதிலும் தற்போது ஒரு செயற்பாடு மாத்திரமே காணப்படுகின்றது. அதன் படி அதற்காக அல்லது புதிதாக ஆரம்பிக்கப்படும் அமைதிகாக்கும் செயற்பாடுகளின் தேவைப்பாடுகளின் படி இந்த வண்டியை இணைப்பதற்காக எதிர்பார்க்கும் குறிக்கோளுடன் தற்போது விமானப் படையின் நிறைவேற்றுனர் மோட்டார் வாகன தேக்கத்தில் காணப்படுகின்றது. | குறிக்கோள்களுக்காக பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை விமானப் படைக்கு சொந்தமான விமான பயிற்சி வழங்கும் படையினை அபிவிருத்தி செய்வதற்காக 2018 ஒக்தோபர் 17 திகதி ரூபா 946.32 மில்லியன் தொகை செலுத்தி சீனாவில் இருந்து கொள்வனவு செய்திருந்த ஆரம்ப பயிற்சி வழங்கும் 06 விமானங்களில் ஒன்று 2020 திசெம்பர் 15 திகதி விபத்துக்குள்ளாகி முழுமையாக அழிவடைந்திருந்தது.<br>கொள்வனவு செய்யப்பட்ட ஏனைய 05 விமானங்களின் இயந்திரம் பழுதுபார்த்தல் தாமதமடைந்த காரணத்தினால் 02 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் பயிற்சி அலுவல்களுக்கு பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. அதன் படி மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவும் சிக்கனமற்ற செலவொன்றாகியிருந்தது. | PT-6 விமானங்களின் இயந்திரங்கள் பறக்கும் ஆயுட்காலம் 600 மணித்தியாலங்கள் ஆகும். எனினும் தற்போது அனைத்து என்ஜின்களும் பயன்பாட்டில் இருந்து அகற்றப்பட்டு காணப்பட்டது. இந்த என்ஜின்களின் பராமரிப்பு (Overhaul) அலுவல்கள் தாமதமடைந்த காரணத்தினால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. | அரசாங்க பணம் செலவிடப்படும் போது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காகவே பயன்படுத்துவதற்கு தேவையான முறையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். இந்த விமானங்களின் என்ஜின்களின் பறக்கும் மணித்தியாலங்களின் எண்ணிக்கை முடிவடையும் போது அதற்காக பொருத்தப்படும் என்ஜின் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது "கருணை இல்லம்" மற்றும் "எமக்காக நாம்" வீடமைப்புச் செயற்திட்டங்களுக்காக நலன்கள் செலுத்துவதற்காக பாதுகாப்பு அமைச்சிலிருந்து ரூபா 36,572,648 தொகை அரச கணக்குகளுக்கு புறம்பான விமானப் படையின் மத்திய நலன்புரி மற்றும் மறுசீரமைப்பு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டு பின்னர் அதற்குரிய நலன்பெறுவோருக்கு செலுத்தப்பட்டு இருந்தது. | 'எமக்காக நாம்' பாதி வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டம் மற்றும் 'கருணை இல்லம்' வீடமைப்பு செயற்திட்டத்திற்காக அரச பாதுகாப்பு அமைச்சிலிருந்து வழங்கப்படும் அனைத்து பணமும் குறிப்பிட்ட நலன் பெறுவோரின் கணக்குகளுக்கு அனுப்பும் இடைநிலை கணக்கொன்றென இலங்கை விமானப் படைத் தளபதியின் கீழ் நலன்புரி பணிப்பாளர் மூலம் முகாமைத்துவம் செய்யப்படும் மத்திய நலன்புரி மற்றும் மறுசீரமைப்பு நிதியம் (CW&RF) பயன்படுத்தப்படுவதுடன் இந்தக் கணக்கு விமானப் படையில் கடமையாற்றும் நபர்களின் நலன்புரி அலுவல்களுக்காக பயன்படுத்தப்படும் கணக்கொன்றாகும். | அரசாங்கப் பணம் அரச கணக்குகளுக்கு புறம்பாக ஏனைய அரச சார்பற்ற கணக்குகளின் மூலம் கொடுப்பனவு செய்வதற்காக பயன்படுத்தப்படக் கூடாது மற்றும் அச் செலவுகள் அரச கணக்குகளில் இருந்து விலகியிருந்த காரணத்தினால் கணக்காய்விற்கு ஆளாக்கப்படமாட்டாமை. அரச பணம் செலவிடப்படல் நிதிப் பிரமாணங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 மே 21 திகதி முதல் ஆகஸ்ட் 19 வரையான காலப் பகுதியில் "X Press Pearl" கப்பலின் விபத்தினை அடக்குவதற்காக பங்களிப்பு இலங்கை விமானப் படையின் வழங்கப்பட்டமையால் 2,875,136.55 அ.டொ.க்கான நட்டஈட்டுத் தொகை ஒன்று மீளளிப்பு செய்யப்பட வேண்டியிருந்ததுடன், அதில் அடங்கியுள்ள 1,149,500 அமெ.டொ. இற்கான ஆபத்துக் கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்காக தேவையான மேலதிக சான்றுகள் விமானப் படையினால் சமர்ப்பிக்கப்படாமையால் குறிப்பிட்ட நட்டஈட்டுத் தொகையை செலுத்தும் தரப்பினர் அக் கொடுப்பனவை நிராகரித்திருந்தமையால் அந்த | (i) "X Press Pearl" கப்பலுக்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பாக தீயணைத்தல் மற்றும் அதன் காரணமாக மாசடைந்த கடலோரப் பகுதிகளை துப்பரவு செய்வதற்காக இலங்கை விமானப் படையினால் ஈடுபடுத்திய பங்களிப்புக்காக பல சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதன் படி கூட்டுத்தொகை 3,449,867 அ.டொ. பெறுமதி ஒன்று இலங்கை விமானப் | நட்டஈடு வழங்களுக்கு உரிய ஆபத்துக் கொடுப்பனவு பெற்றுக் கொள்வதற்காக முறையான சாட்சிகள் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் அரசு பாரிய தொகையொன்றினை இழப்பதினால் முறையான சான்றுகள் இலங்கை விமானப் படையினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முழுத் தொகையினையும் அரசு இழந்திருந்தது. | படை சார்பாக கோரப்பட்டு இருந்தது.<br>(ii) எவ்வாறாயினும் விமானப் படையினால் கோரப்பட்டு இருந்த ஆபத்துக் கொடுப்பனவு செலுத்துவதற்காக குறிப்பிட்ட கப்பல் காப்புறுதி கம்பனி, அவர்களின் விருப்பமின்மையினை தெரிவித்திருந்தது. | |
| (இ) 2004-2013 காலப் பகுதியில் இலங்கை விமானப் படையினால் திருத்த வேலைக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட கூட்டுப் பெறுமதி 179,633 அ.டொ.களுக்கான 50 விமான உதிரிப் பாகங்களும் 2016 முதல் 2020 வரை காலப் பகுதியில் வெளிநாட்டு திருத்த வேலைக்காக அனுப்பப்பட்ட 53 விமான உதிரிப் பாகங்கள் 2 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலங் கடந்திருந்த போதிலும் விமானப் படைக்கு கிடைத்திருக்கவில்லை. | சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக போதிய விடயங்கள் காணப்படவில்லை என இலங்கை விமானப் படையின் சட்டப் பணிப்பாளரினால் பிரதான பெறுகை உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்னர் விமானங்கள் பொறியியல் பணிப்பாளருக்கு விடயங்களை அறிவிக்கும் படி அறிவித்த பின்னர் சட்ட நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | திருத்த வேலைகளுக்காக வெளிநாடுகளுக்கு அனுப்பப்படும் விமான உதிரிப் பாகங்கள் தாமதமின்றி திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் நீண்டகாலத் தாமதம் தொடர்பாக சட்ட அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு விமானப் படையின் அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 2557 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 464 வெற்றிடங்கள் காணப்பட்டது. அதிகாரம் அளிக்கப்படாத (ஏனைய பதவிகள்) உத்தியோகத்தர்களின் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | இலங்கை விமானப் படையின் படைவீரர்கள்/ விமானப் பெண்கள் (நிரந்தர/ சுயவிருப்ப) தொடர்பாக தரவுகள் பின்வருமாறு ஆகும்.<br><br>அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை (ஏனைய பதவிகள்) 34381<br>2022.12.31 திகதியில் உள்ளவாறு வெற்றிடங்கள் 5324<br>2023.05.01 திகதியில் 6780 | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உள்ளவாறான பதவியணிக்கு பொருத்தமான விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 34,381 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 5324 வெற்றிடமாக காணப்பட்டது. | உள்ளவாறு வெற்றிடங்கள் | |
| (ii) | 2022 திசெம்பர் 31 திகதி அளவில் சிவில் பதவியணியில் (சிரேஷ்ட/ மூன்றாம்தர/ இரண்டாம்தர/ ஆரம்பதர) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 3057 இல் வெற்றிடங்கள் 769 தொகையாக காணப்பட்டது. | இந்த வெற்றிடங்கள் திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது உள்ளவாறான பதவியணிக்கு பொருத்தமான விதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |